Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Justiz- und Polizeidepartement EJPD
Département fédéral de justice et police DFJP
Dipartimento federale di giustizia e polizia DFGP
**Staatssekretariat für Migration SEM**
**Secrétariat d'Etat aux migrations SEM**
**Segreteria di Stato della migrazione SEM**



சுருக்கமான தகவல்கள்

# B

## அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் — அடையாள அட்டை B

# F

## தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் — அடையாள அட்டை F

# F

## தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள் — அடையாள அட்டை F


Böhler Thyssen

# சுவிஸ் நாட்டிற்கு நல்வரவாகுக!

நீங்கள் அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர், தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதி அல்லது தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர் என்ற அந்தஸ்துக்கு பெற்றுள்ளீர்கள். உங்கள் இந்த அந்தஸ்துக்கு விசேட ஒழுங்கு விதிகள் செல்லுபடியாகும். ஆகவே இவைகள் குறித்து நாங்கள் உங்களுக்கு இக் கைநூல் மூலமாக விபரங்களைத் தருகின்றோம்.

எவ்வாறெனினும் நீங்கள் நீண்ட காலத்திற்கு சுவிசில் வாழப்போகின்றீர்கள், எனவே நீங்கள் சுவிஸ் நாட்டு வாழ்வில் நன்கு ஒன்றித்து முன்னேறுவதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஆகவே நீங்கள் இது குறித்து அறிந்து கொள்வது மற்றும் தொழில் மற்றும் உயர்கல்விக்கு முயற்சிப்பது முக்கிய மானதாகும். நீங்கள் இந்தக் கைநூலில், அடிப்படை ரீதியான வழிகாட்டுதல்களையும் அதேபோன்று முகவரிகளுக்கான இணையக் குறியீடுகளையும் மற்றும் மேலதிக தகவல்களையும் காணலாம்.
நீங்கள் விரைவாகவும் திறமையுடனும் சுவிஸ் ஒழுங்கு முறைகள் குறித்து அறிந்து கொள்வீர்கள் என நாம் நம்புகின்றோம்.

குடிவரவாளர்களுக்கான அரச செயலர் SEM

**இந்தக் கைநூலை இலத்திரனியல் வடிவமாக www.sem.admin.ch எனும் இணையத்தளத்தில் பின்வரும் மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்: டொச், பிரெஞ்சு, இத்தாலியம், ஆங்கிலம், அரேபியம், ரிகிறின்யா, குர்திஸ், திபேத்தியம், பார்சி, தமிழ், சோமிலி மற்றும் சேர்பிஸ்/கொராட்டிஸ்/போஸ்னிஸ்**

**www.sem.admin.ch**

## அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் — அடையாள அட்டை B

B

அகதி என்றால் ஒரு நபர் அவரது தாய் நாட்டில் அல்லது அவர் இறுதியாக வாழ்ந்த தேசத்தில், அவரது இனம், மதம், பிரஜாவுரிமை, ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவில் சேர்ந்திருத்தல் அல்லது அவரது அரசியல் கொள்கைகள் காரணமாக பாரிய பின்னடைவுகளை எதிர் கொண்டால் அல்லது விபரீத விளைவுகள் ஏற்படலாம் என்ற காரணம் காட்டக்கூடிய பயம் இருந்தால், இது பொருத்தமானதாகும். இந்த அர்த்தப்படுத்தல், கென்ப் (Genf) நகரின் அகதிகளுக்கான நடுநிலையத்தின் தீர்மானம் மற்றும் அகதிகளுக்கான ஐரோப்பிய மனித உரிமை ஆணையத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. மிகவும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் எனும்போது, விசேடமாக உடல், உயிர் அல்லது சுதந்திரமாக நடமாட ஆபத்தை எதிர்கொள்வது மற்றும் அதேபோன்று எடுக்கப்படும் நடவடிக்கைகளால், பொறுத்துக் கொள்ள முடியாத அளவிற்கு உளரீதியான அழுத்தங்களை ஏற்படுத்துபவைகளும் இதில் அடங்கும். பெண்களைப் பொறுத்தவரை, தஞ்சம் கோரியமைக்கு விசேடவிதமான காரணங்கள் இருந்திருக்கலாம். அகதிகளுக்கான ஆணையத்தின் தீர்மானம் உறுதியாகக் கூறுகின்றது, எவருக்காவது மேலே குறிப்பிட்ட ஆபத்துகள் இருக்குமாயின், எவரையும் அந்த நாட்டிக்கு திருப்பி அனுப்புவதை அனுமதிக்க முடியாது என்பதாகும்.

## அடிப்படைச் சட்ட விளக்கம்

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்: அகதிகளின் சட்டரீதியான உரிமைகள் குறித்து அகதிகள் தஞ்ச சட்டம் வரையறுத்துள்ளது (Art. 58–62 AsylG), தஞ்ச சட்டத்தின் தற்போதைய நிலைப்பாட்டை பின்வரும் இணையத்தளப் பக்கத்தில் பார்வையிடலாம்: www.admin.ch/ch/d/sr/c142_31.html

## வெளிநாட்டவருக்கான அடையாள அட்டை

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் ஒரு வெளிநாட்டவருக்கான அடையாள அட்டை B ஐ பெற்றுக்கொள்வார்கள். இது ஒரு வருடத்திற்கு வரையறுக்கப்பட்டது அத்துடன் இதை நீடித்துக் கொள்ளலாம். இந்த நீடிப்பை, ஏதாவது முக்கிய காரணங்கள் இருப்பின், உதாரணமாக ஒரு நபர் சுவிசின் உள்ளக மற்றும் வெளியகப் பாதுகாப்பிற்கு பாதிக்கச்செய்பவர் என்ற காரணம் இருப்பின் அது நிராகரிக்கப்படும். சுவிசில் 10 வருடங்கள் வாழ்ந்த பின்னர், காலவரையற்ற நிரந்தர அனுமதி (அடையாள அட்டை C) வழங்கப்படும். ஒருவர் ஒத்துழைத்து முன்னேறுவதை வெற்றிகரமாக மேற்கொள்ளும் பட்சத்தில் 5 வருடங்களிலேயே நிரந்தர வதிவிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும்.

# தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் — அடையாள அட்டை F

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டுள்ள அகதி என்பது, ஒரு நபர், ஒரு அகதி என்ற தத்துவத்துக்கு உட்பட்டவர். ஆனால் அகதி என்ற நிலை, முதன்முதலாக தாய்நாட்டிலிருந்து அல்லது வந்த நாட்டிலிருந்து வெளியேறிய காரணத்தினாலோ- அல்லது வெளியேறிய பின்னர் ஒரு நபர் நடந்து கொண்ட நடைமுறை காரணமாக ஏற்பட்டிருக்கலாம். சிலவேளைகளில், அகதி என்ற தத்துவத்திற்கு உட்பட்டிப்பினும், குற்றச்செயலில் ஈடுபட்டதால் அல்லது சுவிஸ் நாட்டின் உள்ளக அல்லது வெளியகப் பாதுகாப்புக்கு பாதகமாக அல்லது அவற்றை மீறியிருந்தால், இவ்வித தடைசெய்யப்பட்ட செயற்பாடுகள் காரணமாக தஞ்சத்துக்கு தகுதியில்லாமல் போகலாம். இந்த நபர்களுக்கு தஞ்சம் வழங்கப்பட மாட்டாது, இருப்பினும் இவர்களுக்கு தற்காலிகமாக சுவிசில் வாழ்வதற்கு புகலிடம் வழங்கப்படும்.

## அடிப்படைச் சட்ட விளக்கம்

**தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகளின் சட்டரீதியான நிலை, கென்ப் நகர அகதிகளுக்கான நடுநிலையத்தின் தீர்மானத்துக்கு அமைவாக இருக்கும். தற்காலிகமாக புகலிடம் வழங்குவது வெளிநாட்டவர் களுக்கான மத்திய அரச சட்டவிதிகளின்படி (AuG Art. 83ff) வரையறுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் குறித்த சட்டத்தின் தற்போ-தைய நிலைப்பாட்டை பின்வரும் இணையத்தளப் பக்கத்தில் பார்வையி-டலாம்: www.admin.ch/ch/d/sr/c142_20.html**

## வெளிநாட்டவருக்கான அடையாள அட்டை

**தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் அடையாள அட்டை F ஐ பெற்றுக்கொள்வார்கள். இது ஆகக்கூடியது 12 மாதங்களுக்காக வழங்கப்படுவது அத்துடன் வசிக்கும் மாநிலத்தால் ஒவ்வொரு முறையும் பரிசீலிக்கப்பட்டு, மேலும் 12 மாதங்கள் நீடிக்கப்படும். தற்காலிக-மாக புகலிடம் வழங்கப்பட்டோர், சுவிசில் 5 வருடங்கள் வாழ்ந்த பின்னர், வதிவிட அனுமதிக்கு (அடையாள அட்டை B) விண்ணப்பிக்கலாம். திணைக்களம் இது குறித்து எடுக்கும் முடிவின்போது, ஒத்துழைத்து முன்னேறுவது, குடும்ப நிலை, தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்புவதை ஊக்குவிக்கும் நிலை போன்றவற்றைக் கவனத்திற் கொள்ளும்.**

## தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள் — அடையாள அட்டை F

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர் என்பது, ஒரு நபருக்கு அவரது தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது, ஆனால் அவரை வெளியேற்றுவது- அல்லது திருப்பி அனுப்புவதை நிறைவேற்ற முடியாதுள்ளது. இதற்கு பின்வரும் மூன்று காரணங்களால் இயலாதிருக்கலாம்: வெளியேற்றுவது- அல்லது திருப்பி அனுப்புவது **இயலாமலுள்ளது** (உதாரணமாக கடவுச்சீட்டோ அல்லது பயணப் பத்திரமோ இல்லாதிருத்தல்), **அனுமதிக்க முடியாதுள்ளது** (உதாரணமாக வெளியேற்றுவது அனைத்துலகச் சட்டவிதிகளுக்கு எதிராக இருப்பது) அல்லது **திருப்பி அனுப்புவதை ஊக்குவிக்க முடியாதிருத்தல்** (உதாரணமாக அந்த நபர் கடின நோயினால் பீடிக்கப்பட்டிருந்து, அவரது தாய் நாட்டில் அதற்காகப் போதியளவு சிகிச்சையைப் பெறமுடியாதிருந்தால்).

### அடிப்படைச் சட்ட விளக்கம்

**தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்களின் சட்டரீதியான நிலை, வெளிநாட்டவர்களுக்கான மத்திய அரச சட்டவிதிகளின்படி வரையறுக்கப்பட்டிருக்கும் (AuG Art. 83ff), வெளிநாட்டவர்கள் குறித்த சட்டத்தின் தற்போதைய நிலைப்பாட்டை பின்வரும் இணையத்தளப் பக்கத்தில் பார்வையிடலாம்: www.admin.ch/ch/d/sr/c142_20.html**

### வெளிநாட்டவருக்கான அடையாள அட்டை

**தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள் அடையாள அட்டை F ஐ பெற்றுக்கொள்வார்கள். இது ஆகக்கூடியது 12 மாதங்களுக்காக வழங்கப்படுவது அத்துடன் வசிக்கும் மாநிலத்தால் ஒவ்வொரு முறையும் பரிசீலிக்கப்பட்டு, மேலும் 12 மாதங்கள் நீடிக்கப்படும். தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டோர், சுவிசில் 5 வருடங்கள் வாழ்ந்த பின்னர், வதிவிட அனுமதிக்கு (அடையாள அட்டை B) விண்ணப்பிக்கலாம். திணைக்களம் இது குறித்து எடுக்கும் முடிவின்போது, ஒத்துழைத்து முன்னேறுவது, குடும்ப நிலை, தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்புவதை ஊக்குவிக்கும் நிலை போன்றவற்றைக் கவனத்திற் கொள்ளும்.**

## சுருக்கமான தகவல்கள் மற்றும் ஒழுங்கு விதிகள்

## சுட்டிலக்கம்


B அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள்
— அடையாள அட்டை B

F தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள்
— அடையாள அட்டை F

F தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள்
— அடையாள அட்டை F

## வசித்தல்

B
F
F

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட-வர்கள் ஏற்கனவே தஞ்சம் கோரும்போது ஒரு மாநிலத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பர், தஞ்சம் வழங்குவது குறித்த முடிவின் பின்னரும் அவர்கள் அதே மாநிலத்திலேயே வசிப்பர். உங்களை அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் மாநிலத்தின் எந்த நகரில் வசிப்பதென்பதை நீங்கள் விரும்பியபடி தெரிவுசெய்யலாம். நீங்கள் வசிக்கும் முகவரியை மா-நிலத்தில் உங்களுக்குப் பொறுப்பான திணைக்களத்தில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். வழங்கப்படும் வெளிநாட்டவர் அடையாள அட்டை (மேலே பார்க்கவும்) அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் மாநிலத்தில் மட்டுமே செல்லுபடியாகும்.

**வாடகைக் குடியிருப்பாளர் அறிந்திருக்க வேண்டிய பெறுமதிமிக்க விடயங்கள 15 மொழிகளில்:**
**www.bwo.admin.ch/dokumentation/00106/00112/00121/index.html?lang=de**
**சுவிஸ் வாடகைக் குடியிருப்பாளருக்கான- சங்கம்:**
**www.mieterverband.ch**

## வேறு மாநிலத்திற்கு மாறுவது

B

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு பொதுவான வெளிநாட்டவர் சட்டவிதிகள் செல்லுபடியாகும். அவர்கள் வேறு மாநிலத்துக்கு மாற விரும்பினால், மாற விரும்பும் புதிய மாநிலத்தின் குடிவரவுத் திணைக்-களத்தில் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் நபர் தொழில் இழந்தவராக இருந்தாலோ அல்லது நிராகரிக்கக்கூடிய காரணங்கள் ஏதாவது இருந்தால் மட்டுமே அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.



---

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் வேறு மாநிலத்திற்கு மாறுவதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் நபர் தொழில் இழந்தவராக இருந்தாலோ அல்லது நிராகரிக்கக்கூடிய காரணங்கள் ஏதாவது இருந்தாலோ அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். வேறு மாநிலத்திற்கு மாறுவதற்கான விண்ணப்பத்தை நேரடியாக SEM ல் ஒப்படைக்க வேண்டும்.

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள் வேறு மாநிலத்திற்கு மாறுவதற்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பத்தை நேரடியாக SEM ல் ஒப்படைக்க வேண்டும். SEM சம்பத்தப்பட்ட மாநிலத்தில் விசாரித்து, இதுகுறித்து முடிவு செய்யும். குடும்பத்துடன் ஒன்றுசேர்வதற்கான தேவை இருக்குமாயின் மற்றும் ஒரு கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அல்லது சம்பந்தப்பட்ட இரு மாநிலங்களும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டால் மட்டுமே இதற்கான அனுமதி வழங்கப்படும்.

## வெளிநாட்டுக்குப் பயணிப்பது

B
F

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் தமது மாநிலத்தில் உள்ள குடிவரவுத் திணைக்களத்தில் அகதிகளுக்கான ஒரு பயணக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம், இதனுடன் அவர்கள் வெளிநாட்டிற்கு சென்று மீண்டும் சுவிசிற்குள் பயணிக்க முடியும். இதற்காக நீங்கள் நேரடியாக திணைக்களத்திற்கு சமூகமளிக்க வேண்டும். அதன்பின் பயணக் கடவுச்சீட்டு SEM ஆல் வழங்கப்படும், இது வழமையாக 5 வருடத்திற்கு செல்லுபடியாகும்.

**அவதானிக்கவும்: அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் தனது தாய் நாட்டிற்கு பயணித்தால், அவரது அகதி அந்தஸ்து மீளப் பெறப்படலாம்.**



F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள் தாம் விரும்பியவாறு வெளிநாட்டுக்குப் பயணிக்க முடியாது. அவர்களது தாயக கடவுச்சீட்டை SEM ல் ஒப்படைக்க வேண்டும். உறுதிப்படுத்தக்கூடிய காரணங்கள் இருக்குமாயின் (உதாரணமாக கடுமையான சுகவீனம் அல்லது குடும்ப உறுப்பினரது மரணம்) மாநிலத்தில் உள்ள குடிவரவுத் திணைக்களத்தில் நேரடியாகக் கதைத்து மீள வருவதற்கான விசாக்கு விண்ணப்பிக்கலாம். எவருக்காவது தாயக கடவுச்சீட்டைப் பெறுவதற்கான வசதி இல்லாதிருந்தால், வெளிநாட்டவர் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும், இதன் மூலம் பயணிக்க வசதி ஏற்படும். இது வழமையாக 10 மாதங்களுக்கு செல்லுபடியாவதுடன் அனுமதிக்கப்பட்ட பயணத்துக்காக மட்டுமே பாவிக்கலாம்.

# குடும்பம் மீளச் சேர்வது

B

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களை (கணவன், மனைவி, பதிவு செய்யப்பட்ட துணைவர், துணைவி அதேபோன்று 18 வயதிற்கு குறைந்த பிள்ளைகள) சுவிசிற்கு வரவழைக்-கலாம். அவர்கள் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், ஏதாவது விசேட சூழ்நிலைகள் எதிராக இல்லாத பட்சத்தில், இந்த அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் பிள்ளைகள், அவர்கள் சுவிசில் பிறப்பவர்களாக இருந்தால், தானாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட அகதி அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவில SEM இல் ஒரு விண்ணப்பம் செய்யப்பட வேண்டும், இதன் மூலம் பிள்ளையும் அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட முடியும்.

---

F

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகளும் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்களும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டு குறைந்தது 3 வருடங்களின் பின்னர் மாநில குடிவரவாளர் திணைக்களத்தில் குடும்பத்தை வரவழைப்பதற்காக விண்ணப்பிக்கலாம். இதன்போது கணவன், மனைவி மற்றும் வயது குறைந்த (மற்றும் திருமணமாகாதவர்கள்) பிள்ளைகள் வந்து சேரலாம். குடும்பம் மீளச் சேர்வதற்கு நிபந்தனையாக, அந்த நபர்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழவேண்டும் என்பதுடன், வீடு போதியளவு பெரிதாக இருப்பதும், குடும்பம் சொந்தப் பொருளாதாரத்தில் தங்கியிருக்க வேண்டும் என்பதாகும் (சமூக உதவிப் பணம் பெறுவதில் தங்கியிருக்கக் கூடாது).

குடும்பத்தை வரவழைப்பது 5 வருடங்களுக்கு உள்ளாக செயற்படுத்தப்பட வேண்டும். 12 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களை அழைப்பதற்கான விண்ணப்பம் குறைந்தது 12 மாதங்களுக்கு உள்ளாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

## ஒத்துழைத்து முன்னேறுவது

BFF

எவர் நீண்ட காலம் சுவிசில் வாழ விரும்புகின்றாரோ, அவர் தன்னை இயலுமானவரை விரைவாகப் பிறருடன் ஒத்துழைத்து முன்னேற்றிக் கொள்ள வேண்டும். குடிவரவாளர்கள் தமக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், தாம் வாழும் பகுதிக்குரிய மொழியைக் கற்றுக்-கொள்வதற்கு, ஒரு தொழிலைத் தேடிக் கொள்வதற்கு, சமூக வாழ்வில் பங்கெடுப்பதற்கு முயற்சிப்பீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். ஒத்துழைத்து முன்னேறுவதைப் பொறுத்தவரை, சுவிஸ் இந்த நடைமுறையை பலவிதமான நிகழ்வுகள் மற்றும் திட்டங்களூடாக ஊக்குவிப்பதுடன் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பங்கள் கிடைப்பதற்கு முயற்சிக்கின்றது. இதன் நோக்கம் என்னவென்றால், மத்திய அரச சட்ட யாப்பை, அனை-வரும் மதித்து நடக்க வேண்டும் என்பதுடன் சுவிசில் நாங்கள் அவ-தானத்துடன் மற்றும் விட்டுக்கொடுப்புடன் சமாதானமாக ஒன்று சேர்ந்து வாழவேண்டும் என்பதாகும்.

**சுவிசின் ஒத்துழைத்து முன்னேறும் கொள்கை குறித்து மேலதிக தகவல்கள்:**
**www.sem.admin.ch/bfm/de/home/themen/integration.html**

## ஒத்துழைத்து முன்னேறுவதை ஊக்குவிப்பது

BFF

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட-வர்களைப் பொறுத்தவரை, சுவிசில் ஒத்துழைத்து முன்னேறுவதை ஊக்குவிப்பதற்கு அதிகளவான அரச மற்றும் தனியார் அமைப்புகள் பாடத்திட்டங்கள் மற்றும் வசதிகளை வழங்குகின்றன. இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இது குறித்து தேவைப்படும் தகவல்-களை ஒத்துழைத்து முன்னேறுவதற்கான நடுநிலையம் அல்லது ஒத்துழைத்து முன்னேறுவதற்கான மாநில துறைசார் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஒத்துழைத்து முன்னேறுவதை ஊக்குவிப்பது குறித்த மேலதிக தகவல்கள்:**
**www.sem.admin.ch/bfm/de/home/themen/integration/foerderung.html**

## பாடசாலை

B F

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகளின் பிள்ளைகள் கட்டாயமாக சுவிசில் அனைத்து ஏனைய பிள்ளைகள் பாடசாலை செல்வது போன்று செல்வதுடன் உயர் கல்வியையும் மேற்கொள்ளலாம். அவர்கள் பாலர் பாடசாலை செல்வதுடன் 9 வருடங்கள் கட்டாய பாடசாலை செல்ல வேண்டும். அதன்பின் அவர்களின் திறமைக்கு ஏற்றவாறு ஒரு தொழிற்கல்வியை மேற்கொள்ளலாம் அல்லது ஒரு உயர் கல்லூரிக்கு சென்று அதன்பின் பல்கலைக்கழகம் செல்லலாம்.

---

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்களின் பிள்ளைகள் பாலர் பாடசாலை சென்ற பின்னர் 9 வருடங்கள் கட்டாய பாடசாலை செல்ல வேண்டும். தொழிற்கல்வி, உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழகம் செல்வது மாநிலத்தால் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும்.

**பாடசாலை மற்றும் தொழிற்கல்வி குறித்த மேலதிக விபரங்களுக்கு:**
**www.ch.ch/private/00060/00062/index.html?lang=de**
**www.berufsbildung.ch**

## மேலதிக தராதரங்களைப் பெறுவது

B F F

சுவிசின் தொழில் சந்தையைப் பொறுத்தவரை, தொழிலாளர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து வழங்கப்படுகின்றது, உதாரணமாக மொழி வல்லமை மற்றும் திறமையைக் கொண்டிருத்தல் ஆகும். பல வேளைகளில் வெளிநாட்டவர்களின் தகுதி, தொழில் சந்தையால் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை அல்லது அவர்கள் வெளிநாட்டில் பெற்ற தகுதி ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மொழி கற்கும் வகுப்புகள், மேலதிக தராதரங்களைப் பெறும் கல்விகள் அல்லது வேறு வசதிவாய்ப்புகள் தொழில் உலகிற்குள் நீங்கள் நுழைய அனுமதியைத் தேடித்தரலாம். இவ்விடயத்தில் தேவையான தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கு ஒத்துழைத்து முன்னேறுவதற்கான நடுநிலையம் அல்லது ஒத்துழைத்து முன்னேறுவதற்கான மாநில துறைசார் நிலையத்தின் உதவியை நாடலாம்.

**மாநிலத்தில் தொழில் குறித்த ஆலோசனை நிலையங்களின் முகவரிகள்:**
**www.kbsb.ch/dyn/19622.php**

## தொழில்

B F F

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட-வர்களுக்கு ஒரு தொழிலில் சேர்ந்து கொள்வதற்கு ஒரு அனுமதி தேவைப்படும். இதைப் பெறுவதற்கு எதிர்கால தொழில் வழங்குனர், மா-நிலத்தில் அதற்குப் பொறுப்பான திணைக்களத்துக்கு விண்ணப்பிப்பார். முதலில் இந்த தொழில் அனுமதி கிடைத்த பின்பே வேலை செய்யத் தொடங்கலாம். ஊதியம்- மற்றும் தொழில் நிபந்தனைகளை சரியான முறையில் கடைப்பிடிப்பதைக் கருத்திற்கொண்டே திணைக்களம் இந்த அனுமதியை வழங்கும். இதன்மூலம் அகதியாக ஏற்றுக்கொள்ளப்-பட்டவர்கள், தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள் தொழில் பெறுபவர்-களாகப் பாதுகாக்கப்படுவதுடன், அவர்கள் மற்றவர்களை விட குறைந்த ஊதியத்திற்கு தொழில் செய்யும் நிலையும் தவிர்க்கப்படும்.

---

B F

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகளுக்கு அவர்கள் வசிக்கும் மாநிலத்தின் தொழில் சந்தைக்குள் நுழைவதற்கு எவ்வித தடையுமில்லை மற்றும் அவர்கள் அனைத்து வர்த்தகத் துறையிலும் தொழில் செய்யலாம். அவர்கள் ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கு துடிப்புடன் முயலவேண்டும்.

---

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட நபர்களுக்கு, மாநிலத் திணைக்களம், தொழில் சந்தை- மற்றும் பொருளாதாரநிலை எவ்வாறு இருப்பினும் தொழில் செய்வதற்கான ஒரு அனுமதியை வழங்க வேண்டும்.



**தொழில் மற்றும் அதற்கான இடங்களைத் தேடுதல் விடயம் குறித்த அனைத்துக்கும்: www.treffpunkt-arbeit.ch**
**தொழிலாளர்களுக்கான தகவல்கள்:**
**www.ch.ch/private/00054/00055/index.html?lang=de**

B
F
F

## சுகாதார நடைமுறை

சுவிஸ் ஒரு திறமையான சுகாதாரப் பராமரிப்பை வழங்குகிறது. நீங்களும் உங்கள் குடும்பமும் எவ்வாறு நலமாக வாழ முடியும் என்பது குறித்து அறிந்து கொள்வதுடன் எவ்விதமான வசதி வாய்ப்புகள் உள்ளது என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

சுவிசில் வாழும் அனைத்து நபர்களும் கட்டாயமாக ஒரு அடிப்படைக் காப்புறுதியை ஒரு மருத்துவக் காப்புறுதி நிலையத்தில் செய்திருக்க வேண்டும்,- பிள்ளைகள் உட்பட.

சுகாதாரப் பகுதியைப் பொறுத்தவரையிலும், இயலுமானவரை ஒரு மாநில மொழியில் அவற்றை அறிந்து கொள்வதுடன் நன்கு விளங்கிக் கொள்வது முக்கியமானதாகும்.

**மத்திய சுகாதார அமைச்சு உள மற்றும் உடல் ரீதியான நோய்களால் துன்பப்படுவோருக்கான விரிவான தகவல்களை பல வித்தியாசமான மொழிகளில் வழங்கியுள்ளது:**
**www.migesplus.ch**

**சுவிசின் “றெட் குறொஸ்” (SRK) பேர்ண், சூரிச், கென்ப் மற்றும் லவ்சானெ நகரங்களில், சித்திரவதையால் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மருத்துவ மற்றும் உளவள ஆற்றுப்-படுத்தல் உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றது:**
**www.redcross.ch/de/organisation/ambulatorium-fuer-folter-und-kriegsopfer/hilfe-fuer-traumatisierte-menschen**

**மனநோய் சம்பந்தமான நடுநிலையம் GRAVITA, சென். காலெனில் சித்திரவதையால் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மருத்துவ மற்றும் உளவள ஆற்றுப்படுத்தல் உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றது:**
**www.gravita.ch/angebot**

B
F
F

## சமூகக் காப்புறுதிகள்

சுவிஸ் ஒரு நன்கு திட்டமிடப்பட்ட வலைப்பின்னலான சமூகக் காப்-புறுதிகளைக் கொண்டுள்ளது. அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்-காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள், சுவிஸ் மக்களைப் போன்றே பாதுகாக்கப்பட்டிருப்பர். சமூகக் காப்புறுதி, எவராவது தொழில் இழந்தால் அல்லது தொழில்செய்ய இயலாமை அடைந்தால் உதவி செய்யும். வயதான நபர்களுக்கு ஒரு ஓய்வூதியம் கிடைக்கும். தொழில் செய்யும் பெண்கள், ஊதியத்துடன் தாய்மைக்கால விடுமுறையைப் பெற்றுக்கொள்வர். தம்பதிகளில் ஒருவர் இறந்தாலோ அல்லது பெற்-றோரில் ஒருவர் இறந்தாலோ (சிறு வயதினருக்கு) ஒரு உதவிப் பணம் வழங்கப்படும். நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால், இந்த சமூகத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்வீர்கள் (வருமானத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகை இதற்காகக் கழித்துக் கொள்ளப்படும்), தொழிலாளர்கள், தொழில் வழங்குனர் ஊடாக விபத்து மற்றும் தொழிலால் ஏற்படும் நோய்களுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டிருப்பர்.

**சமூகக் காப்புறுதிகள் குறித்து மேலதிகமாக:**
**www.bsv.admin.ch/themen/index.html?lang=de**
**தொழில் இழந்த காலத்துக்கான காப்புறுதி:**
**www.treffpunkt-arbeit.ch/arbeitslos/erste_schritte**
**மேலதிக காப்புறுதிகள்:**
**www.ch.ch/private/00029/00039/index.html?lang=de**

## வரிகள் மற்றும் விசேட பங்களிப்புகள்

B
F
F

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள் சுவிசில் கட்டாயமாக வரி செலுத்த வேண்டும். அவர்களிடம் இருந்து வரிப்பணம் பெற்றுக்கொள்ளப்படும், அதாவது வரித்தொகை நேரடியாக ஊதியத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படும் (விதி 83 தொடக்கம் 110 வரையான நேரடியான வரிகள் குறித்த மத்திய அரச சட்டவிளக்கம்). மாநிலத்துக்கு மாநிலம் வரிகளின் அளவு வித்தியாசப்படும்.

---

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்கள், தொழில் செய்பவர்களாக இருந்தால், வழக்கமான சமூகக் கொடுப்பனவுகளைவிட ஒரு விசேட பங்களிப்பைச் செலுத்துவார்கள். அது நேரடியாக தொழில் வழங்குனரால் ஊதியத்திலிருந்து கழிக்கப்பட்டு குடிவரவாளர்களுக்கான பிரதம செயலருக்கு அனுப்பிவைக்கப்படும். இந்த விசேட கொடுப்பனவின் அளவு வரிகள் கழிபடாத முழு ஊதியத்தொகையில 10 % மாக நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விசேட கொடுப்பனவு, தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 வருடங்களின் பின்போ அல்லது சுவிசிற்குள் வருகை தந்து 7 வருடங்களின் பின்போ அல்லது இந்தத் தொகை 15000 பிராங் அளவை எட்டினாலோ நிறுத்தப்படும்.

**விசேட கொடுப்பனவுகள் குறித்த மேலதிக விபரங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரம் குடிவரவாளர்களுக்கான அரச செயலரால் வெளியிடப்பட்டுள்ளது:**
**www.sem.admin.ch/bfm/de/home/asyl/sonderabgabe.html**

## சமூக உதவி

B
F

அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகளுக்கு தம்மைப் பராமரிப்பதற்கு போதிய நிதிவசதி இல்லாத பட்சத்தில், சுவிஸ் மக்களைப் போன்றே சமூக உதவியைப் பெறுவதற்கான உரிமை உள்ளது.

---

F

தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்டவர்களுக்கான சமூக உதவி மாநில ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அடிப்படையாக தஞ்சம் கோருவோருக்கான சட்டவிதி 80–84ன் பிரகாரம் (விதி 86 AuG), இது நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் சில மாநிலங்களில் அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக புகலிடம் வழங்கப்பட்ட அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையிலும் பார்க்க இவர்களுக்கு குறைந்த அளவு உதவித் தொகையே வழங்கப்படுகின்றது.

---

B
F
F

சமூக உதவி, வரிப்பணத்திலிருந்து வழங்கப்படுகின்றது. இந்த சமூக உதவித் தொகையின் அளவு மாநிலத்துக்கு மாநிலம் வித்தியாசப்படும். அதிக மாநிலங்கள், சுவிஸ் சமூக உதவி ஒன்றியம் (SKOS) முடிவு செய்துள்ள விதிகளின்படி கணக்கிடுதலை செய்து கொள்கின்றனர். இதன் மூலம் ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் பராமரிக்கக்கூடிய சமூக உதவி சுவிசில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களை பின்வரும் இணைய முகவரியில் காணலாம்**
**http://skos.ch/sozialhilfe-und-praxis/haeufig-gestellte-fragen**



**அனைத்திலும் மேலாக தொழில் செய்யக்கூடிய நபர்கள், அவர்கள் சமூக உதவிப் பணத்தில் வாழுவதிலிருந்து விடுபட்டு சொந்த உழைப்பில் தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரித்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

## முக்கிய முகவரிகள்

மாநில குடிவரவாளர்கள்- மற்றும் தொழில் சந்தை திணைக்களங்கள்:
**www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_ behoerden/adressen_kantone_und.html**

மாநில பிரஜாவுரிமைத் திணைக்களம்:
**www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/kantonale_einbuergerungsbehoerden.html**

பதிவு விடயங்களுக்கான மாநிலத் திணைக்களம்:
**www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/Adressen_Meldeverfahren.html**

மாநிலங்கள் மற்றும் நகரங்களில் ஒத்துழைத்து முன்னேற்றும் விடயங்களுக்கான தொடர்பு நிலையம்:
**www.sem.admin.ch/bfm/de/home/ueberuns/kontakt/kantonale_behoerden/kantonale_ansprechstellen.html**

## மேலதிக பிரயோசனமான இணையத் தளங்கள்

சுவிஸ் திணைக்களங்களுக்கான நேரடி இணையம்:
**www.ch.ch**

குடிவரவாளர்களுக்கான அரச செயலர் SEM:
**www.sem.admin.ch**

குடிவரவாளர்கள் விடயங்கள் குறித்த மத்திய அரச ஆணையம் EKM:
**www.ekm.admin.ch**


**பதிப்புரிமை**

| | |
|---|---|
| வெளியிடுபவர் | Staatssekretariat für Migration SEM<br>Quellenweg 6, CH–3003 Bern Wabern |
| தயார்படுத்திய குழு | Information und Kommunikation, SEM |
| வடிவமைப்பு | meierkolb, Luzern |
| நிழற்படங்கள் | Fabian Biasio, Luzern |
| தகவல் பெற்றுக்கொண்டது | BBL, Vertrieb Bundespublikationen<br>CH–3003 Bern<br>www.bundespublikationen.admin.ch |

**1.வது பதிப்பு 2015**



இந்தக் கைநூலை இலத்திரனியல் வடிவமாக www.sem.admin.ch எனும் இணையத்தளத்தில் பின்வரும் மொழிகளில் பெற்றுக்கொள்ளலாம்: டொச், பிரெஞ்சு, இத்தாலியம், ஆங்கிலம், அரேபியம், ரிகிறின்யா, குர்திஸ், திபேத்தியம், பார்சி, தமிழ், சோமிலி மற்றும் சேர்பிஸ்/கொராட்டிஸ்/போஸ்னிஸ்

www.sem.admin.ch